காஞ்சிபுரம் மாவட்டம்

# இரண்டாம் இடைப்பருவ பொதுத் தேர்வு - 2022

**A**

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

## கணக்குப்பதிவியல்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

### பகுதி - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10 x 1 = 10**

1. ஒறுப்பிழப்பு செய்யும்போது பங்கு முதல் கணக்கு எதில் பற்று வைக்கப்படுகிறது?
   அ) முகமதிப்பு ஆ) பெயரளவு மதிப்பு இ) செலுத்தப்பட்ட தொகை ஈ) அழைக்கப்பட்ட தொகை
2. சொத்துக்களை வாங்கிய பங்குகள் வெளியிடும்போது வரவு வைக்கப்படும் கணக்கு
   அ) விற்பனையாளர் க/கு ஆ) பற்பல சொத்துகள் க/கு இ) பங்கு முதல் க/கு ஈ) வங்கி க/கு
3. முக மதிப்பை விட அதிகமாக பெற்ற தொகை வரவு வைக்கப்படும் கணக்கு
   அ) பத்திர முனைமக் கணக்கு ஆ) அழைப்பு முன்பணக் கணக்கு
   இ) பங்கு முதல் கணக்கு ஈ) பங்கு ஒறுப்பிழப்பு கணக்கு
4. `8 செலுத்தப்பட்ட `10 மதிப்புள்ள பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது எனில், அதன் குறைந்த அளவு மறு வெளியீட்டு விலை
   அ) பங்கொன்று `10 ஆ) பங்கொன்று `8 இ) பங்கொன்று `5 ஈ) பங்கொன்று `2
5. ஒறுப்பிழப்பு செய்த பங்குகளை மறுவெளியீடு செய்த பிறகு, பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கின் இருப்பு மாற்றப்படுவது
   அ) பொது காப்பு கணக்கிற்கு ஆ) முதலின காப்பு கணக்கிற்கு
   இ) பத்திர முனைமக் கணக்கிற்கு ஈ) உபரி கணக்கிற்கு
6. நிதிநிலை அறிக்கைகள் வெளிக்காட்டாதது
   அ) பணம் சாரா தகவல்கள் ஆ) கடந்த கால தகவல்கள்
   இ) குறுகியகால தகவல்கள் ஈ) நீண்டகால தகவல்கள்
7. நிதி என்னும் சொல் குறிப்பிடுவது
   அ) நடப்பு பொறுப்புகள் ஆ) நடைமுறை முதல்
   இ) நிலைச் சொத்துக்கள் ஈ) நீண்டகால சொத்துக்கள்
8. ஒரு பொது அளவு இருப்புநிலைக் குறிப்பில், நீண்டகால சொத்துக்களின் சதவீதம் 75 எனில், நடப்புச் சொத்துக்களின் சதவீதம் எவ்வளவு?
   அ) 175 ஆ) 125 இ) 25 ஈ) 100
9. பின்வருவனவற்றில் எது நிதிநிலைப் பகுப்பாய்வின் ஒரு கருவி அல்ல?
   அ) போக்குப் பகுப்பாய்வு ஆ) பொது அளவு அறிக்கை
   இ) ஒப்பீட்டு அறிக்கை ஈ) நிர்ணயிக்கப்பட்ட அடக்கவிலையியல்
10. ஒரு வரையறு நிறுமத்தின் விற்பனை `1,25,000-லிருந்து `1,50,000-க்கு அதிகரித்துள்ளது. இது ஒப்பீட்டு வருமான அறிக்கையில் எவ்வாறு தோன்றுகிறது?
    அ) +20% ஆ) +120% இ) –120% ஈ) –20%

### பகுதி - ஆ

**II. எவையேனும் 5 வினாவிற்கு விடையளி. (வினா எண்.17 கட்டாய வினா) 5 x 2 = 10**

11. மிகை ஒப்பம் என்றால் என்ன?
12. அழைப்பு நிலுவை என்பதன் பொருள் என்ன?
13. அனிதா என்பவர் தஞ்சாவூர் மோட்டார் வரையறு நிறுமத்தின் `10 மதிப்புள்ள 500 நேர்மைப் பங்குகளை வைத்துள்ளார். அவர் விண்ணப்பத்தின் மீது `3, ஒதுக்கீட்டின் போது `5 செலுத்தி உள்ளார். ஆனால் முதலாம் மற்றும் இறுதி அழைப்புத் தொகையான `2 செலுத்தவில்லை. அழைப்பு தொகையை செலுத்தத் தவறியதால் இயக்குநர்கள் அப்பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தனர். ஒறுப்பிழப்பிற்கான குறிப்பேடுப் பதிவினைத் தரவும்.
14. நிதிநிலை அறிக்கைகள் யாவை?
15. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளைப் பட்டியலிடவும்.
16. இலக்ஷித் என்பவர் `10 மதிப்புள்ள 50 நேர்மைப் பங்குகளை தன் வசம் வைத்துள்ளார். அவர் அதற்கென விண்ணப்பத்தின் மீது `2 செலுத்தியுள்ளார். ஆனால், ஒதுக்கீட்டின் மீது `4 மற்றும் முதலாவது அழைப்பின் மீது `2 செலுத்தவில்லை. முதலாவது அழைப்பின் பின் இயக்குனர்கள் பங்கினை ஒறுப்பிழப்பு செய்தனர். ஒறுப்பிழப்பு செய்த பங்குகளுக்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.
17. பத்திர முனைமக் கணக்கு பற்றி சிறுகுறிப்பு தரவும்.

### பகுதி - இ

**III. எவையேனும் 5 வினாவிற்கு விடையளி. (வினா எண்.24 கட்டாய வினா) 5 x 3 = 15**

18. ஒறுப்பிழப்பு செய்த பங்குகளின் மறுவெளியீடு என்றால் என்ன?
19. ரொக்கம் தவிர இதர மறுபயனுக்கு பங்கு வெளியீடு என்றால் என்ன?
20. யுனைடட் இண்டஸ்ட்ரீஸ் வரையறு நிறுமம் `10 மதிப்பிலான நேர்மைப் பங்குகளை 10% முனைமத்தில் வெளியிட்டது. விண்ணப்பத்தின் மீது `3, ஒதுக்கீட்டின் மீது (முனைமம் உட்பட) `4, முதலாவது அழைப்பின் மீது `2 மற்றும் இறுதி அழைப்பின் மீது `2 என தொகை செலுத்தப்படவேண்டும்.
    250 பங்குகள் வைத்துள்ள மனோஜ் ஒதுக்கீட்டு, முதலாவது மற்றும் இறுதி அழைப்பினை செலுத்தத் தவறியதால், அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. குறிப்பேடுப் பதிவினைத் தரவும்.

21. ஜெயம் டயர்ஸ் நிருமம் 15,000 சாதாரணப் பங்குகளை ` 10 வீதம் பின்வருமாறு செலுத்தும்படி வெளியிட்டது. விண்ணப்பத்தின் மீது ` 3, ஒதுக்கீட்டின் மீது ` 5, முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் மீது ` 2. அனைத்து தொகையும் பெறப்பட்டது. ஆனால் 100 பங்குகளை வைத்திருக்கும் ஒரு பங்குதாரர் அழைப்பு பணத்தை செலுத்த தவறினார். அழைப்பு நிலுவைக் கணக்கைப் பயன்படுத்தி அழைப்பிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

22. நிதிநிலை அறிக்கையின் குறைபாடுகள் ஏதேனும் மூன்றினை தரவும்.

23. ஒப்பீட்டு அறிக்கை தயாரிப்பில் உள்ள படிநிலைகளை விளக்கவும்.

24. அருள் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையை தயாரிக்கவும்.

| விவரம் | 2015-16 ` | 2016-17 ` |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 50,000 | 60,000 |
| இதர வருமானம் | 10,000 | 30,000 |
| செலவுகள் | 40,000 | 50,000 |

## பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **3 x 5 = 15**

25. அ) புராகிரஸ் நிருமம் 50,000 சாதாரண பங்குகளை, பங்கொன்று ` 10 வீதம் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ` 2, ஒதுக்கீட்டின் போது ` 4, முதலாவது அழைப்பின் போது ` 2 மற்றும் இரண்டாவது அழைப்பின் போது ` 2 செலுத்தப்பட வேண்டும். அனைத்துப் பங்குகளும் ஒப்பப்பட்டன. மற்றும் அனைத்து தொகைகளும் முறையாக பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகளை தரவும்.

*(அல்லது)*

ஆ) அஞ்சலி மாவு அரைக்கும் வரையறு நிறுமம் பங்கு ஒன்று ` 10 வீதம் ` 4,00,000/- அங்கீகரிக்கப்பட்ட முதல் கொண்டுள்ளது. அதில் 30,000 நேர்மைப் பங்குகளை விண்ணப்பத்துடன் ` 2, ஒதுக்கீட்டில் ` 5 மற்றும் முதலாவது அழைப்பில் ` 3 பெற வெளியிட்டது. அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டன. அனைத்து தொகைகளும் பெறப்பட்டன. ஆனால் ஒதுக்கீட்டில் 500 பங்குகள் ஒரு பங்குதாரர் முழுவதுமாக தனது தொகையினை செலுத்தி விட்டார். குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

26. அ) விஸ்வநாத் அறைகலன் வரையறு நிறுமம், ஒன்று ` 10 வீதம் 20,000 நேர்மைப் பங்குகளை பங்கொன்றிற்கு ` 2 முனைமத்தில் வெளியிட அழைப்பு விடுத்தது. ` 2 விண்ணப்பத்தின் மீதும், ` 5 (முனைமம் உட்பட) ஒதுக்கீட்டின் மீதும், ` 5 முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் மீதும் மிக ஒப்பமாக 30,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. கூடுதலாக பெறப்பட்ட விண்ணப்பங்கள் இயக்குனர்களால் நிராகரிக்கப்பட்டன. அனைத்து தொகையும் பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

*(அல்லது)*

ஆ) பரணி நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து, ஒப்பிட்டு வருமான அறிக்கையை தயாரிக்கவும்.

| விவரம் | 2016-17 ` | 2017-18 ` |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 30,000 | 45,000 |
| இதர வருமானம் | 4,000 | 6,000 |
| செலவுகள் | 10,000 | 15,000 |
| வருமான வரி | 30% | 30% |

27. அ) மீனா நிறுமத்தின் 2018 மார்ச் 31ஆம் நாளைய பொது அளவு இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

| | விவரம் | 2018 மார்ச் 31 ` |
|---|---|---|
| I. | பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | |
| | பங்குதாரர் நிதி | 2,00,000 |
| | நீண்டகாலப் பொறுப்புகள் | 1,60,000 |
| | நடப்புப் பொறுப்புகள் | 40,000 |
| | மொத்தம் | 4,00,000 |
| II. | சொத்துகள் | |
| | நீண்டகாலச் சொத்துகள் | 3,00,000 |
| | நடப்புச் சொத்துகள் | 1,00,000 |
| | மொத்தம் | 4,00,000 |

*(அல்லது)*

அ) பின்வரும் தகவல்களிலிருந்து, கவிதா நிறுமத்தின் போக்கு சதவீதங்கள் கணக்கிடவும்.

` (ஆயிரத்தில்)

| விவரம் | 2015-16 | 2016-17 | 2018-19 |
|---|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 100 | 125 | 150 |
| இதர வருமானம் | 20 | 25 | 30 |
| செலவுகள் | 100 | 120 | 80 |
| வருமான வரி | 30% | 30% | 30% |

******